## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட ரக்னா ஆரக்ஷக லங்கா கம்பனியின் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடாத்தப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம், இலங்கை கணக்கீட்டு நியமத்தின் மூலம் தேவைப்படும் சந்தர்ப்பம் தவிர்த்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் வருமானம் மற்றும் செலவினங்கள் ஈடுசெய்யப்பட முடியாது. எவ்வாறான போதிலும், 2019 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய கணக்குகளில் நிலவிய ரூபா 75 மில்லியனான செலவு மீதிகள் அத்திகதியில் நிலவிய வரவு மீதிகளுக்கும் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகளில் நிலவிய கூட்டுத்தொகை ரூபா 343,757 ஆன வரவு மீதி அத்திகதியில் நிலவிய செலவு மீதிகளுக்கும் ஈடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, பெறுமதி சேர் வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி, உழைக்கும் போதே செலுத்தும் வரி, பொருளாதார சேவைக் கட்டணங்கள் மற்றும் முத்திரை வரியாக ரூபா 8 மில்லியன் கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய வரி மீதிக்கு வருமான வரி மற்றும் உழைக்கும் போது செலுத்தும் வரி வரவு மீதி ஈடு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 13 மில்லியனான பிற்போடப்பட்ட வரி வரவு மீதி நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் ஈடு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019/2020 நிதிக்கூற்றுக்கள் முதல் காண்பிப்பதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 66 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய பெற வேண்டிய வட்டி வருமானம் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019/2020 நிதிக்கூற்றுக்களிலிருந்து பெற வேண்டியவ ட்டி வருமானம் மற்றும் குறுங்கால வைப்புப் பெறுமதி ஆகியவை தனித்தனியே காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 106 (ஈ) ஆம் பந்தியின் பிரகாரம், மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றின் ஏனைய விரிவான வருமானங்களினுள் ஆயுட்கால இலாபம் மற்றும் அந்நிய செலாவணி இலாபம் ஆகியவை தனித் தனியே வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதிலிருந்து விலகி ரூபா 354 மில்லியனான மொத்த விரிவான வருமானமும் மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019/2020 நிதிக்கூற்றுக்களிலிருந்து மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் ஆயுட்கால இலாபம் மற்றும் அந்நிய செலாவணி இலாபம் ஆகியவை தனித் தனியே வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 14 மற்றும் 20 ஆம் பந்தியின் பிரகாரம், செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் நிறுவனத்தின் தேறிய இலாபம் அல்லது நட்டத்தினை தீர்மானிப்பதற்காக உள்ளடக்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய சம்பவங்களின் பிரதிபலனாவதுடன், அது விரிவான வருமானக் கூற்றினுள் வெளிப்படுத்தப்பட்ட வருமானம் மற்றும் வெலவுகளின் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலான பெற வேண்டிய மற்றும் செலுத்த வெண்டிய மீதிகள் உரிய காலப்பகுதியிலான வேறுபாடுகளை காண்பித்து சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறான போதிலும், 2019 மார்ச் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றின் ஏனைய விரிவான வருமானங்களினுள் உள்ளடக்கப்பட்ட ரூபா 7 மில்லியனான ஆயட்கால இலாபம் மற்றும் ரூபா 217 மில்லியனான அந்நிய செலாவணி இலாபம் வரிக்கு பின்னரான இலாபத்திற்காக சீராக்கப்பட்டிருந்தது. | 2019/2020 நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது காசுப்பய்ச்சல் கூற்றினுள் வரிக்கு முன்னரான இலாபத்தினை சீராக்கும் போது அந்நிய செலாவணி இலாபம் மற்றும் ஆயட்கால இலாபத்தினை எடுக்காதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பயன்படுத்தப்படும் ரூபா 13 மில்லியன் கிரயமான மோட்டார் வாகனங்கள் மற்றும் ரூபா 39 மில்லியன் கிரயமான போட் ஆமர் மற்றும் பெலஸ்டிக் ஹெல்மட் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 79 (ஆ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | 2019/2020 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தலைமை அலுவலகத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 739 மில்லியன் செலவிடப்பட்ட பின்னர் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்த கட்டிடம் அமைந்திருந்த சுமார் 86.4 பேர்ச் பரப்பளவான காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019/2020 நிதிக்கூற்றுக்களில் அந்த பெறுமதியை மதிப்பிடவும், அதை நிதிக்கூற்றுக்களில் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் மூலம் வெளிப்படுத்த வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி | ஒத்த அறிக்கைகளின் பிரகாரம் மீதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| மோட்டார் வாகனங்கள் | 26 | 29 | 3 | உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் கொடுக்கப்பட்ட மதிப்பு, தொடர்புடைய பயன்பாட்டு ஆவணங்களை ஒத்திருக்க வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மிலலியன் | | | |
| (அ) | வருடாந்த பெறுமானத் தேய்வு செலவினம் | 10 | நிலையான சொத்துக்களை சுவீகரித்த திகதிகள் மற்றும் பெறுமானத் தேய்வு தொடர்பில் | 2019/2020 ஆம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்காய்விற்கு எழுத்துமூல சான்றுகள் வெளிப்படுத்தப்பட வேண்டியமை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | விபரங்களுடனான ஆவணங்கள் / பதிவேடுகள் | | |
| (ஆ) | வியாபார மற்றும் ஏயைன பெற வேண்டிய மீதி மற்றும் நிலையான சொத்துக்கள் | 2,366 | மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் | பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றும் மீதி சான்றுபடுத்தல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் | 762 | மீதி உறுதிப்படுத்தல்கள் | கம்பனிக்கு செலுத்த வேண்டியுள்ள தொகை சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்விற்கு எழுத்துமூல சான்றுகள் வெளிப்படுத்தப்பட வேண்டியமை. |
| (ஈ) | போட் ஆமர் மற்றும் பெலஸ்டிக் ஹெல்மட் | 9 | நிலவிய இருப்பு பற்றாக்குறை தொடர்பில் கோரப்பட்டுள்ள தகவல்கள் | நியமிக்கப்பட்டுள்ள சபையின் அவதானிப்புரைகள் மற்றும் பரிந்துரைகளின் பிரகாரம் உரிய தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. | -மேற்படி- |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2019 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கம்பனியின் நிகர லாபம் ரூபா 2,299 மில்லியன் வர்த்தகம் மற்றும் பிற பெற வேண்டிய மீதிகளில் ரூபா 1,651 மில்லியன் கடல்சார் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதனால் பெற வேண்டிய கடன் மீதியாகும். அதில் ரூபா 1,525 மில்லியன் அல்லது மொத்த கடனில் 92.4 சதவீதம் அவன்கார்ட் நிறுவனத்திலிருந்து பெற வேண்டிய மீதிகள் ஆகும். ரங்கல மற்றும் காலி மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களில் இருந்து வரவேண்டிய மீதியான முறையே ரூபா 84 மில்லியன் மற்றும் ரூபா 378 மில்லியன் 07 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாது காணப்பட்டதுடன், இந்த கடனை மீதியை பெறுவதற்கும் நடவடிக்கை | நட்டஈடு தொகையை அறவிடுவதற்கு எதிர்பார்த்துள்ளமையால், பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், ரங்கல மற்றும் காலி மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களில் இருந்து வரவேண்டிய தொகையை 2021/2022 நிதிக்கூற்றுக்களில் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

எடுக்கப்படவில்லை.

| | | |
|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய கடன் நிலுவைகளின் காலப் பகுப்பாய்வின் படி, 08 நிறுவனங்களிடமிருந்து 05 வருடங்களுக்கும் மேலாக பெற வேண்டிய நிலுவைத் தொகைகள் ரூபா 711 மில்லியன் ரூபாவாக காணப்பட்டதுடன், 06 மாதங்களுக்கும் குறைவான பெற வேண்டிய கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 54 மில்லியன் ஆகும். நீண்டகாலமாக தீர்க்கப்படாத கடன் நிலுவைகளை மீட்பதில் கவனம் செலுத்தாமல் அந்த கம்பனிகளுடன் நிறுவனம் தொடர்ந்து செயற்படுகின்றது. | 2021 நிதியாண்டில் பதிவழிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவு | கம்னியின் ஐந்தொகை திகதியின் பன்னர் 06 மாதங்களினுள் அல்லது பதிவாளரினால் தீர்மானிக்கப்படும் வகையில் நீடிக்கப்படும் ஏதேனும் காலப்பகுதியொன்றினுள், நிதிக்கூற்றுக்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், நிதிக்கூற்றுக்கள் பொறுப்பு வாய்ந்த நபர் ஒருவரினால் அது சட்டத்தின் நிமயங்களின் பிரகாரம் உள்ளமை தொடர்பில் சான்றுபடுத்தப்பட்டுள்ளதாகவும், பணிப்பாளர் சபைக்காக கம்பனியின் இரு பணிப்பாளர்களினால் திகதியிடப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளதாகவும், உரிய கம்பனியின் பணிப்பாளர் சபையினால் பொறுப்பாக செயற்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. 2019 மார்ச் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 08 ஆந் திகதியே நிறைவு செய்யப்பட்டிருந்தன. | கருத்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் நல்லாளுகை தொடர்பான சுற்றறிக்கை | | | |
| (i) | 5.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டுக்கான நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிராகரம் செயற்பட வேண்டும். |
| (ii) | 6.5.1 ஆம் பந்தி | கம்பனியால் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் உரிய பிரதிகள் உரிய அமைச்சுக்கள் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டுக்கான பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இறுதி நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 08 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அத்திகதியில் தாமதம் 02 வருடங்கள் மற்றும் 06 மாதங்கள் ஆகும். | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | 6.5.3 ஆம் பந்தி | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iv) | 7.4.1 ஆம் பந்தி | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத் தடவைகள் 04 ஆகக் குறைந்தது நடாத்தப்பட வேண்டிய போதிலும், 02 கூட்டத் தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | -மேற்படி- | -மேற்படி- |
| (v) | 7.4.5 ஆம் பந்தி | மீளாய்வாண்டுக்காக 2019 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலையான சொத்துக்களின் மெய்மையாய்வுக்காக பொருள் மெய்மையாய்வுச் சபையொன்று நியமிக்கப்பட்டிராததுடன், நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டு | 2020 ஆம் ஆண்டு முதல் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளும் நடைமுறை | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | படிப்படியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (vi) | 8.2.2 ஆம் பந்தி | (i) | பல் வருடங்களாக முன்கொண்டுவரப்படும் நிதிக்கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ள ரூபா 1,161 மில்லியனான குறுங்கால வைப்புக் கணக்குகள் காலப்பகுதியில் மீள முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதனை மீள முதலீடு செய்வதற்கு உரியதாக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரசிற்குரிய வங்கிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| | | (ii) | கம்பனியின் பணிகள் காரணமாக பெறப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 3.1 மில்லியன் வைப்புக்களாக முதலீடு செய்வதற்கு உரிய எழுத்துமூல சான்றுகள் மீளாய்வாண்டினுள் ஐ.அ.டொலர் 2.1 மில்லியன் மீள முதலீடு செய்வதற்க உரிய பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |
| (vii) | 9.3 ஆம் பந்தி | | கம்பனி கூட்டிணைக்கப்பட்ட திகதி முதல் இது வரையிலும் பதவியணியினருக்காக ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையொன்று (நிர்வாக அறிவுறுத்தல்கள்) தயாரிக்கப்பட்டு பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் மனிதவள முகாமைத்துவத்திற்குரிய அனைத்து பணிகளும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின இடிப்படையில் மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறுகள் ரூபா 129,489,498 ஆன இலாபமா காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 22,259,368 ஆகும். அதன் பிரகாரம், நிதிப் பெறுபேறுகளில் ரூபா 107,230,130 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வருமானம் 481 சதவீதமாக அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

கடந்த ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டின் வங்கிக் கட்டணங்கள் முறையே ரூபா 1,575,912 மற்றும் ரூபா 4,269,077 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான அந்த செலவினம் 170 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே, கடந்த வருடத்தின் மற்றும் மீளாய்வாண்டின் செயற்பாட்டு மற்றும் ஏனைய அலுவலக செலவினங்கள் முறையே ரூபா 1,220,467 மற்றும் ரூபா 5,503,891 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அந்த செலவினம் 350 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரக்னா லங்கா செக்யூரிட்டி கம்பனியின் பிரதான வருமான ஆதாரம் உள்நாட்டு மற்றும் கடல்சார் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதில் தங்கியுள்ள போதிலும், இந்த வருவாயை சரியான முறையில் விலைப்பட்டியல் செய்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்புதல், அந்த நிறுவனங்களுடனான வேறுபாடுகளைக் கண்டறிந்து, சரியான முகாமைக்கு மற்றும் கட்டுப்பாட்டுக்கு பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளை நிறுவுதல் ஆகியவற்றில் நிர்வாகம் கவனம் செலுத்தவில்லை. | 2021/2022 நிதியாண்டு முதல் தனியான கடன் வசூலிப்பு பிரிவு அமைக்கப்பட்டு அதன் மூலம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மேம்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வ/ப அவன்கார்ட் மெரிடயிம் சர்விசஸ் தனியார் கம்பனி மற்றும் கம்பனிக்கு இடையேயான வணிக ஒப்பந்தம் 2019 ஜனவரி 24 அன்று காலாவதியானது, ஆனால் 2020 செப்டம்பர் நிலவரப்படி, 103 தானியங்கி மற்றும் அரை தானியங்கி துப்பாக்கிகள் மற்றும் 28,789 தோட்டாக்கள் மீண்டும் கம்பனிக்கு | எதிர்காலத்தில் அந்த ஆயுதங்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2011 ஆம் ஆண்டு கப்பல் நிறுவனங்களிடம் விடுவிக்கப்பட்ட நிலையில், இதுவரை திருப்பிக் கொடுக்கப்படாத 13 துப்பாக்கிகள் காணாமல் போயுள்ளன, இதில் முறையே 04 தானியங்கி மற்றும் 03 அரை தானியங்கி துப்பாக்கிகள் உள்ளடங்கியிருந்தது. | பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் அடங்கிய குழுவொன்று இந்த விடயம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்தக் குழு தனது கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பித்த பின்னர் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவுள்ளது. | -மேற்படி- |